5. அறிவிப்பு.

நன்றியுரைத் தீர்மானத்திற்கு ஆளுநரின் மறுமொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் அவர்களுக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானம் இப்பேரவையில் 20—2—1968-ம் தேதி நிறைவேற்றப் பட்டதைக் குறித்து அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி எனக்கு வரப் பெற்றதைத் தெரிவிக்கிறேன் :—

"நான் சட்டப் பேரவையின் கூட்டத்தை ஆரம்பித்து நிகழ்த்திய உரைக்கென சட்டப்பேரவை அனுப்பியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதில் மனநிறைவு எய்துகிறேன்."

6. 1968–69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம்—(தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். முதலில், திரு. அரங்கநாதன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. ஆர். என். அரங்கநாதன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை எந்தப் பின்னணியில், எந்தச் சூழ்நிலையில், எந்த நிதி நிலைமையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூர்ந்து பார்ப்போமானால், உண்மையிலேயே அதிலே பாராட்டுதலுக்குரிய அம்சங்கள், வரவேற்கக்கூடிய சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன என்பதை உணர முடியும். இந்த நிதி நிலை அறிக்கையை அதிகமாக அலசிப் பார்த்ததாக எண்ணிக்கொண்டு, இதைப் பலவிதமாக வருணனை செய்திருக்கிறார்கள். ஒரு காங்கிரஸ் உறுப்பினர், இதற்கு அர்த்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே, இதை ஒரு "லாட்டரி பட்ஜெட" என்றும், It is a budget in gambling என்றும் பல விதமாக வருணித்திருக்கிறார்கள். அத்தகைய வருணனைகளுக்கு எந்த அளவுக்குப் பொருத்தம் இருக்குமோ, இருக்காதோ, ஆனால், அதற்குரிய ஆதாரங்கள் நிச்சயமாக இருக்க முடியாது.

இந்தப் பட்ஜெட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து, இதிலே ஒரு பகுதி க்ளெய்ம்ஸ் பெட்டிஷன் என்று இருப்பதாகவும், இன்னொரு பகுதி சார்ஜ் ஷீட் என்று இருப்பதாகவும், இன்னொரு பகுதி "மெர்ஸி பெட்டிஷன்", அதாவது, கருணை மனு என்று இருப்பதாகவும், பகுதி பகுதியாகப் பிரித்து விமர்சனம் செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே, மாநில அரசுக்கு இருக்கும் உரிமைகளைக் கூறும் நேரத்தில், எந்தவிதமான கருணையையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு மாறாக, உரிமைக் குரலை எழுப்பும் நேரத்தில், அதற்கு ஒத்துழைப்பு தரவேண்டியதுதான் இன்றைய சூழ்நிலையில் மாநில அரசினுடைய முன்னேற்றத்திற்கும் பொருளாதார உயர்விற்கும் வழிகோலுவதாகும்.

இந்தப் பட்ஜெட்டிலே, முக்கியமாக, பிரதானமாகச், சாட்டப்பட்ட குற்றச் சாட்டு, இதிலே மத்திய அரசின் மீது ஒரு வசை புராணமே பாடியிருக்கிறார்கள். என்று சொல்லுகிறார்கள். இதிலே மத்திய அரசின் மீது பெரிய பெரிய குற்றச்சாட்டுக்களை சாட்டியிருப்பதாகக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 1967–68-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டானாலும் சரி, 1968–69-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டானாலும் சரி, எந்தப் பின்னணியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது, அதனுடைய ஆதாரங்களாக இருக்கின்றவை எவை என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னால் தீட்டப்பட்ட திட்டங்களெல்லாம், திட்டமிட்ட பொருளாதாரம் என்று சொல்லப்பட்டாலும் கூட, அதனுடைய விளைவுகள், பலன்கள் யாருக்குக் கிட்ட வேண்டுமோ அவர்களுக்குக் கிட்டாமல், திட்டமிட்டவர்கள் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டதாக திரு. சஞ்சீவ ரெட்டியார் போன்ற காங்கிரஸ் தலைவர்களெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். திட்டமிட்டவர்கள் செய்த தவ